BSNL ஊழியர் சங்கம்

தமிழ் மாநிலம்

சுற்றறிக்கை எண்:24 **தேதி:-19.09.2017**

இந்த ஆண்டு PLIஆக ரூ.7000/- வழங்க BSNLEU வலியுறுத்தல் மற்றும் பல செய்திகள்

அன்பார்ந்த தோழர்களே,

BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு மற்றும் தோழர் சுவபன் சக்கரவர்த்தி நy.GS ஆகியோர் 15.09.2017 அன்று CMந BSNL திரு அனுபம் ஸ்ரீவாஸ்தவா அவர்களை சந்தித்து PLIஆக ரூ.7,000/- உடனடியாக வழங்க வற்புறுத்தினார்கள். ரிலையன்ஸ் ஜியோயின் சவால்கள், பண மதிப்பிழப்பு மற்றும் GST அறிமுகம் ஆகிய சிரமங்களுக்கு இடையேயும் BSNL நல்ல செயல்பாட்டை செய்துள்ளது என்பதை சுட்டிக்காட்டி நமது தலைவர்கள் கோரிக்கையை நியாயப்படுத்தி வற்புறுத்தினார்கள். இந்த விஷயத்தில் உடனடியாக முடிவெடுக்க வலியுறுத்தினர். ரிலையன்ஸ் ஜியோவின் வருகை, பண மதிப்பிழப்பு மற்றும் GST அறிமுகம் ஆகியவற்றின் காரணமாக வருவாய் கடுமையாக குறைந்துள்ளதால் கடந்த மாத ஊதியம் கூட வங்கியில் OVERநRAFT எடுத்து தான் கொடுக்கப்பட்டதாக BSNL CMந தெரிவித்தார். ஆனாலும் பண்டிகைக் காலம் துவங்குவதற்கு முன் நிர்வாகம் PLI வழங்க வேண்டும் என தலைவர்கள் கடுமையாக வாதாடியுள்ளனர்.

வாடிக்கையாளர் சேவை மைய பணிகளை OUTSOURCING:- வாடிக்கையாளர் சேவை மையப் பணிகளை OUTSOURCING செய்வது தொடர்பாக நிர்வாகத்தின் நடவடிக்கைகளுக்கு BSNL ஊழியர் சங்கம் தனது கடுமையான எதிர்ப்பை தெரிவித்த அடிப்படையில் நிர்வாகத்திற்கும் BSNL ஊழியர் சங்கத்திற்கும் இடையே ஒரு விவாதம் 15.09.2017 அன்று நடைபெற்றது. நIRECTOR (CFA) பொறுப்பை கூடுதலாக கவனிக்கும் நIRECTOR(EB) திரு N.K.மேத்தா மற்றும் CGM NC NGN திரு அனில் ஜெய்ன் ஆகியோர் நிர்வாகத்தின் சார்பிலும், BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு மற்றும் தோழர் சுவபன் சக்கரவர்த்தி நy.GS ஆகியோர் சங்கத்தின் சார்பிலும் இந்த விவாதத்தில் பங்கேற்றனர். அங்கீகரிக்கப்பட்ட சங்கத்தினை ஆலோசிக்காமல் இது போன்ற முக்கியமான பிரச்சனையில் நிர்வாகம் தன்னிச்சையாக முடிவெடுத்ததிற்கு தங்களின் கடுமையான எதிர்ப்பினை தலைவர்கள் தெரிவித்தனர். வாடிக்கையாளர் சேவை மைய நடவடிக்கைகளை OUTSOURCING செய்வதின் மூலம் பெருமளவிலான ஊழியர்கள் உபரியாவர்கள் என்கிற தங்களின் கவலையையும் தோழர்கள் தெரிவித்தனர். மேலும் நிர்வாகம் இந்த முயற்சியினை கைவிட்டு விட்டு புதியதாக ஊழியர்களை பணிக்கு எடுக்க வேண்டும் என கடுமையாக வாதிட்டனர். தனியார் தொலை தொடர்பு நிறுவனங்களின் வாடிக்கையாளர் சேவை மையங்களுக்கு இணையாக நமது வாடிக்கையாளர் சேவை மையங்களின் சூழலை உருவாக்குவதன் அவசர தேவை உள்ளதாக நிர்வாகத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டது. ஊழியர்கள் அதிகமாக பணி ஓய்வு பெறுவதால் ஏற்படும் ஊழியர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் வாடிக்கையாளர் சேவை மைய பணிகளை OUTSOURCING செய்ய தேவை

உள்ளதாகவும் தெரிவித்தனர். நீண்ட விவாதங்களுக்கு பின் கீழ்கண்ட உடன்பாடு ஏற்பட்டது:-

1) நாடுமுழுவதும் வாடிக்கையாளர் சேவை மைய பணிகளை OUTSOURCE செய்யும் நிர்வாகத்தின் முடிவு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படும்.
2) நான்கு மண்டலங்களில் உள்ள தலா மூன்று வாடிக்கையாளர் மையங்களை பரிட்சார்த்த அடிப்படையில் OUTSOURCE செய்து பார்ப்பது.
3) இதற்கிடையில் நாடு முழுவதும் உள்ள வாடிக்கையாளர் சேவை மையங்களில் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை வயது விபரங்களை நிர்வாகம் சேகரிப்பது.

நிர்வாகம் இந்த விவரங்களை சேகரித்த பின் அதன் அடிப்படையில் நிர்வாகத்திற்கும் சங்கத்திற்கும் இடையே மேலும் பேச்சு வார்த்தை நடைபெறும்.

GM(Estt) உடன் சந்திப்பு:- BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு மற்றும் தோழர் சுவபன் சக்கரவர்த்தி நy.GS ஆகியோர் 15.09.2017 GM(Estt) திருமிகு அனிமா ராய் அவர்களைசந்தித்து கீழ்கண்ட விஷயங்களை விவாதித்தனர்:-

1) NEPP முதல் பதவி உயர்வில் பலன் பெறாத 74 டெலிகாம் மெக்கானிக்களின் பிரச்சனைக்கு தீர்வு கண்டதற்கு தங்களின் நன்றியை தலைவர்கள் தெரிவித்துக்கொண்டனர்.
2) Sr.TOAக்களின் ஊதிய விகிதம் குறைக்கப்பட்டது தொடர்பாக:- NEPP பதவி உயர்வில் Sr.TOAக்களின் ஊதிய விகிதம் ரூ.7100 லிருந்து ரூ.6550ஆக குறைக்கப்பட்டது தொடர்பாக நீண்ட நாட்களாக BSNL ஊழியர் சங்கம் விவாதித்து வருகிறது. இதற்கு முன்னர் இருந்த GM(Estt) இந்த கோரிக்கையை நிராகரித்திருந்தார். 04.09.2017 அன்று நIRECTOR(SR)உடன் நடைபெற்ற பேச்சு வார்த்தையில் இந்த பிரச்சனை மீண்டும் எழுப்பப்பட்டது. இந்த பின்னணியில் மனிதாபிமான அடிப்படையில் இந்த பிரச்சனையை பரிசீலிக்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட தோழர்களில் ஒரு சிலர் 7100 ஊதிய விகிதம் அமலாக்கப்பட்டது என்றால் கிடைக்கும் கடந்த கால பணப்பலன்களைக் கூட விட்டுக் கொடுக்க தயாராக உள்ளனர் என்ற செய்தியையும் நிர்வாகத்திற்கு தோழர்கள் தெரிவித்தனர்.
3) ஊழியர்களுக்கு அதிகமாக வழங்கப்பட்ட பணம் திரும்ப பிடித்தம் செய்வது:- கடந்த காலத்தில் ஊழியர்களுக்கு அதிகமாக வழங்கப்பட்ட பணம் திரும்ப பிடித்தம் செய்யக்கூடாது என்கிற நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் ஓய்வு பெறும் ஊழியர்களின் ஓய்வு கால பலன்களில் இருந்து அந்த பணத்தை பிடித்தம் செய்யக் கூடாது என கார்ப்பரேட் அலுவலகத்தில் இருந்து மாநில தலைமை பொது மேலாளர்களுக்கு ஒரு கடிதம் எழுத வேண்டும் என BSNL ஊழியர் சங்கத்தின் சார்பில் கோரப்பட்டுள்ளது.
4) EPF நிலுவைத் தொகையை ஊழியர்களிடம் இருந்து பிடித்தம் செய்யக் கூடாது:- இந்த பிரச்சனை 35வதுதேசியக் கவுன்சில் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. இந்த பிரச்சனையில் EPF சட்டத்தின் படி நடக்க வேண்டும் என தேசியகவுன்சில் தலைவர் வழிகாட்டியுள்ளார். இந்த பிரச்சனையை கையாண்டு வந்த 'CORPORATE ACCOUNTS SECTION' சமீபத்தில் 'ESTABLISHMENT SECTION'க்கு கொடுத்துள்ளது. EPF சட்டப்படி ஊழியர்களின் பங்கீட்டு நிலுவைத் தொகையை ஊழியர்களிடம் இருந்து பிடித்தம் செய்யக் கூடாது என தொழிற்சங்க தலைவர்கள் வலியுறுத்தினர். இதற்கான வழிகாட்டுதல்களை தலைமைபொது மேலாளர்களுக்கு GM(Estt) வழங்க வேண்டும் என வற்புறுத்தி உள்ளனர்.
5) விடுபட்ட ட்ராப்ட்ஸ்மேன்களுக்கு சிறப்பு JTO CIVIL/ELECTRICAL இலாகா தேர்வு:- 28வது தேசிய கவுன்சில் கூட்டத்தில் இந்த தேர்வினை நடத்த நிர்வாகம் ஏற்றுக் கொண்டது.

அனால் இந்த பிரச்சனை நீண்ட காலமாக அமலபடுத்தப்படாமல் தேக்கி வைக்கப்பட்டது. இந்த தேசிய கவுன்சில் முடிவை நிர்வாகம் அமலபடுத்த வேண்டும் என ஊழியர் தரப்பில் வற்புறுத்தப்படுத்தப்பட்டது.

பிரச்சனைகள் அனைத்தையும் பொறுமையாக கேட்ட GM(Estt), அனைத்தையும் சாதகமாக பரிசீலிக்க உறுதி அளித்துள்ளார்.

GM(Restg) உடன் சந்திப்பு:- தோழர் P.அபிமன்யு GS மற்றும் தோழர் சுவபன் சக்கரவர்த்தி நy.GS ஆகியோர் 15.09.2017 அன்று GM(Restg) திரு அஷுடோஷ் குப்தா அவர்களை சந்த்தித்து கீழ்கண்ட்ட விஷயங்களை விவாதித்தனர்:

1) BSNLEU, SNEA, AIBSNLEA, FNTO, AIGETOA உள்ளிட்டவர்களின் கோரிக்கையை ஏற்று CGM AP எழுதியுள்ள கடிதத்தின் அடிப்படையில் ஸ்ரீகாகுளத்தை விஜியநகரத்துடனும் ஓங்கோலை குண்டூருடனும் இணைக்கக் கூடாது என பரிந்துரை செய்துள்ளார். அவரின் வேண்டு கோளை ஏற்று நிர்வாகத்தின் முன்மொழிவை நிறுத்தி வைக்கை தலைவர்கள் கேட்டுக்கொண்டனர்.
2) BENEVOLENT FUNந உருவாக்கம்:- BENEVOLENT நிதிக்காக ஊழியர்களிடம் இருந்து பெரிய தொகையை வசூலிக்க கொடுக்கப்பட்ட நிர்வாகத்தின் ஆலோசனையை எதிர்த்து BSNL ஊழியர் சங்கம் ஏற்கனவே கடிதம் கொடுத்திருந்தது. இந்தக் கூட்டத்தில் தாமதமின்றி BENEVOLENT FUNந திட்டத்தை உருவாக்க வேண்டும் என்றும் அதற்கான இறுதி முடிவு எடுக்கும் முன்னர் BSNL ஊழியர் சங்கத்தை கலந்தாலோசிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டனர்.

மேற்கண்ட இரண்டு பிரச்சனைகளையும் கவனித்து தேவையானவற்றை செய்ய GM(Restg) உறுதி அளித்துள்ளார்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

(A.பாபு ராதாகிருஷ்ணன்)
மாநிலச் செயலாளர்